யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
Term Examination, March - 2016

FWC

| தரம் :- 13 (2016) | இந்து நாகரிகம் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ 01 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் இடுக.

01) இந்து மெய்யியலில் உள்ள அத்வைதக் கோட்பாட்டில் வலியுறுத்தப்படும் ஒருமை வாதத்தின் ஆரம்பம் இடம்பெறும் பாடல்
(1) நாஸதீயசூக்தம் (2) ஐமசூக்தம் (3) வருணசூக்தம்
(4) புருஷசூக்தம் (5) ஸ்திரிசூக்தம் (..........)

02) சாமவேதத்தில் இடம்பெறும் பாடல்களின் எண்ணிக்கை
(1) 1028 (2) 1549 (3) 6000
(4) 5250 (5) 1645 (..........)

03) சிந்துவெளிப் பிரதேசத்தில் கண்டெடுக்கப்பட்ட வெண்கலத்தில் வார்க்கப்பட்டுள்ள நடன மாதின் வடிவம் சிவபெருமானது பிற்கால நடனத்திற்கு தோற்றுவாய் ஆகலாம் எனக் கூறியவர்
(1) சேர்ஜோன்மார்ஷல் (2) அறிஞர் மாக்கே
(3) கன்னிங்காம் (4) மா. இராசமாணிக்கனார்
(5) மக்ஸ்முல்லர் (..........)

agaram.lk

04) ஆகமங்கள் கூறும் வழிபாட்டை கிரியை மூலம் எடுத்துக் கூறும் நூல்
(1) சங்கிதைகள் (2) பிராமணங்கள் (3) திருமுறைகள்
(4) திருமந்திரம் (5) பத்ததிகள் (..........)

05) சாக்த ஆகமங்களில் ஒன்றாகக் கருதப்படுவது
(1) காமிகம் (2) ரௌரவம் (3) மகாநிருவாணதந்திரம்
(4) பாஞ்சராத்திரம் (5) பௌஷ்கரம் (..........)

06) மௌரிய வம்சத்தவர்களில் கடைசி அரசனாக ஆட்சி புரிந்த மன்னன்
(1) கனிஷ்கன் (2) புசியமித்திரசுங்கன் (3) அசோகன்
(4) பிரகத்திரதன் (5) சந்திரகுப்தமௌரியன் (..........)

07) காந்தாரக் கலைமரபு செல்வாக்குப் பெற்ற காலமாகக் கருதப்படுவது
(1) பல்லவர் காலம் (2) சோழர் காலம் (3) குப்தர் காலம்
(4) மௌரியர் காலம் (5) குஷாணர் காலம் (..........)

08) அரசர்களின் சாசனங்களில் "நாராயணம் ஸ்துதி" என்னும் திருமால் தோத்திரம் காணப்படும் காலமாகக் கருதப்படுவது
(1) குப்தர் காலம் (2) சோழர் காலம் (3) பல்லவர் காலம்
(4) நாயக்கர் காலம் (5) குஷாணர் காலம் (..........)



Scanned with CamScanner

29) இலக்கண விளக்கச் சூறாவளியை எழுதியவர்

(1) சுவாமி விபுலானந்தர்

(2) சுவாமி ஞானப்பிரகாசர்

(3) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

(4) வேலாயுத முதலியார்

(5) சரவணமுத்து உபாத்தியாயர் (.........)

30) "பிரபோதசைதன்யர்" என்னும் பிரமச்சரிய நாமம் சூட்டப்பட்டவர்

(1) ஆறுமுகநாவலர்

(2) சுவாமி விபுலானந்தர்

(3) சேர் பொன் இராமநாதன்

(4) இந்துபோர்ட் இராஜரத்தினம்

(5) வைத்திலிங்க தேசிகர் (.........)

31) அங்கோவாட் சிவாலயம் அமைந்துள்ள நாடு

(1) சம்பா (2) யாவா (4) தாய்லாந்து

(4) கம்போடியா (5) மலேசியா (.........)

32) எல்லாச் சமயங்களும் நேரடியாகவும், மறைமுகமாகவும் இறை உண்மையை எடுத்துக் காட்டுகின்றன என்பதை தமது அனுபவங்களால் உணர்த்தியவர்

(1) இராமகிருஷ்ணபரமஹம்சர்

(2) விவேகானந்தர்

(3) விபுலானந்தர்

(4) தயானந்த சரஸ்வதி

(5) ராஜாராம மோகன்ராஜ் (.........)

agaram.lk

33) மஹாவல்ல கணபதி கோயில் அமைந்துள்ள இடம்

(1) பாரிஸ் (2) சிட்னி (3) நியூயோர்க்

(4) ரொரன்டோ (5) மெல்போர்ன் (.........)

34) "சிற்பக் கலைக்களஞ்சியம்" எனப் போற்றப்படுவது

(1) நகுலரதம் (2) வீமரதம் (3) சகாதேவரதம்

(4) அர்ச்சுனரதம் (5) தருமராஜரதம் (.........)

35) "ஜலசயனம்" என அழைக்கப்படுவது

(1) ஈஸ்வரன் கோயில்

(2) மாமல்லபுர கடற்கரை கோயில்

(3) முகுந்தன் கோயில்

(4) பனைமலைக் கோயில்

(5) வைகுந்தப் பெருமாள் கோயில் (.........)

36) கலிங்க தேசக் கோயில்களில் நடனமாடிய பெண்கள்

(1) விறலியர் (2) பரத்தையர் (3) கூத்தர்

(4) மகரி (5) தேவரடியார்கள் (.........)



Scanned with CamScanner

37) "நன்மைகளுடன் விண்ணுலகம் நோக்கிச் செல்வாயாக" என்னும் வேண்டுதல் இடம்பெறுவது
(1) இருக்குவேதம் (2) உபநிடதம் (3) பகவத்கீதை
(4) மகாபாரதம் (5) திருமந்திரம் (..........)

38) பிரமசூத்திரத்திற்கு "ஸ்ரீபாஷ்யம்" என்னும் விளக்கவுரையை எழுதியவர்
(1) பாதராயணர் (2) சங்கரர் (3) இராமானுஜர்
(4) மத்துவர் (5) கோவிந்தர் (..........)

39) ஆன்மா அவித்தையிலிருந்து விடுபட்டு தன்னை பிரம்மமென உணர்தல் விடுதலையாகும் எனக் கூறிய தத்துவவாதி
(1) சங்கரர் (2) கௌடபாதர் (3) இராமானுஜர்
(4) கோவிந்தர் (5) மத்துவர் (..........)

40) உண்மை விளக்கத்தின் ஆசிரியர்
(1) மெய்கண்டதேவர்
(2) அருணந்தி சிவாச்சாரியார்
(3) மனவாசகங்கடந்தார்
(4) உமாபதி சிவாச்சாரியார்
(5) திருக்கடவூர் உய்யவந்ததேவர் (..........)

➢ மேல்வரும் பகுதிகளிலே தரப்பட்டுள்ள சொற்களில் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்ட ஒரு விடயத்தோடு தொடர்புடையவை. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் 41 தொடக்கம் 45 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சோடியைத் தெரிவு செய்து விடைத்தாளில் அதன் இலக்கத்தைக் குறிப்பிடுக.

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>திருமூலர் | B<br>மத்துவர் | C<br>மாயோன் | D<br>இராஜசிம்மன் | E<br>சகுணப் பிரமம் |
| F<br>திருப்புகழ் | G<br>திருஓண நன்னாள் | H<br>தமிழாகமம் | I<br>பெரிய கற்றளி | J<br>அருணகிரிநாதர் |

41) திருமுறைகளில் ஒன்றுடன் தொடர்புடைய சோடி
(1) A H (2) A C (3) B G
(4) D I (5) E F (..........)

42) வேதாந்திகளோடு தொடர்புடைய சோடி
(1) A G (2) A I (3) B E
(4) C E (5) B J (..........)

43) வைஷ்ணவ நெறியுடன் தொடர்புடைய சோடி
(1) C I (2) D H (3) B I
(4) C G (5) E G (..........)

44) பல்லவர் கால கட்டடக் கலையுடன் தொடர்புடைய சோடி
(1) C I (2) D I (3) B E
(4) A H (5) D J (..........)

45) நாயக்கர் காலத்தோடு தொடர்புடைய சோடி
(1) A C (2) B I (3) C J
(4) E H (5) F J (..........)



agaram.lk
Scanned with CamScanner

06) "இந்துசமயத் தத்துவங்களில் சைவசித்தாந்தம் தனித்துவம் பெற்று விளங்குகின்றது. "இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மேல்வரும் தலைப்புகளைக் கருத்திற் கொண்டு பரிசீலிக்குக.

(அ) சைவசித்தாந்தத்திற்குரிய பிரமாண நூல்களும் அவற்றின் சிறப்பம்சங்களும்

(ஆ) முப்பொருள் உண்மை

(இ) ஆன்மீக வாழ்வு மேன்மையுற சைவ சித்தாந்தம் கூறும் வழிமுறைகள்

(6 + 6 + 6 + 2 = 20 புள்ளிகள்)

07) இலங்கையில் இந்துசமய வளர்ச்சியில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் பங்களிப்பினை விளக்குக.

(20 புள்ளிகள்)

08) மேல்வருவனவற்றுள் எவையேனும் நான்கினைப் பற்றிச் சுருக்கமான குறிப்புகள் எழுதுக.

(அ) திருக்கோணேஸ்வரம்

(ஆ) அதர்வவேதம்

(இ) நடராஜ மூர்த்தம்

(ஈ) இராமகிருஷ்ணமிஷன்

(உ) தர்மசாஸ்திரங்கள்

(ஊ) குப்தர்கால இலக்கியங்கள்

(5 × 4 = 20 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner

FWC

## யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
## தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## Field Work Centre
## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
## Term Examination, March - 2016

| இந்து நாகரிகம் | புள்ளித்திட்டம் | தரம் :- 13 (2016) |
|---|---|---|

### இந்து நாகரிகம் – I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01) | 1 | 11) | 2 | 21) | 1 | 31) | 4 | 41) | 1 |
| 02) | 2 | 12) | 1 | 22) | 4 | 32) | 1 | 42) | 3 |
| 03) | 4 | 13) | 3 | 23) | 5 | 33) | 3 | 43) | 4 |
| 04) | 5 | 14) | 5 | 24) | 2 | 34) | 5 | 44) | 2 |
| 05) | 3 | 15) | 2 | 25) | 5 | 35) | 2 | 45) | 5 |
| 06) | 4 | 16) | 3 | 26) | 5 | 36) | 4 | 46) | 1 |
| 07) | 5 | 17) | 4 | 27) | 1 | 37) | 1 | 47) | 4 |
| 08) | 1 | 18) | 2 | 28) | 5 | 38) | 3 | 48) | 3 |
| 09) | 4 | 19) | 3 | 29) | 3 | 39) | 1 | 49) | 2 |
| 10) | 4 | 20) | 3 | 30) | 2 | 40) | 3 | 50) | 5 |

(50 × 2 = 100 புள்ளிகள்)

### இந்து நாகரிகம் – II

#### பகுதி - I

agaram.lk

01) (அ) சமய மரபு

இயற்கை சார்ந்த தெய்வங்களின் வழிபாடு விண்ணுலகம், மண்ணுலகம், இடையுலகம் சார்ந்த தெய்வங்கள் பற்றிய தெய்வீகச் சிந்தனைகள் கடவுள் கோட்பாட்டிற்கு அடிப்படையான கடவுள் நம்பிக்கை வளர்ச்சி - யாகம் உபாசனை வேட்டல் - அக்கினி வழிபாடு - மந்திர உச்சாடனம் பண்டமாற்று முறை - செல்வம், நீண்டஆயுள், மக்கட்பேறு நாட்டு நன்மை சாமவேதம் இசையுடன் கூடிய வழிபாடு அதர்வவேதம் கூறும் கிரியைகள்

(ஆ) சமுதாயம்

பிரமச்சரிய சூக்தம் - வாழ்க்கைப் படிநிலை பற்றிய சிந்தனைகள் - குடும்பத் தலைவனின் கடமைகள் சமூகக் கட்டமைப்பு மக்கள் குழுக்களாக வாழ்ந்தனர். ராஜன் - அரச ஆட்சி சமிதி - சபா முக்கியத்துவம் - குடும்ப முறை - விவாகமுறை, பொழுது போக்கு உணவு பிணி நீக்கம் - பொருளை தேடும் மார்க்கம்

(இ) ஒழுக்க தத்துவ சிந்தனை

ஒழுங்கு, ஒழுக்கத்தின் பாதுகாவலன் ரிதஷயகோபா ரிதம் - ஒழுங்கு பிரபஞ்ச ஒழுங்கு வர்ணனுடன் தொடர்பு நாசதீயசூக்தம்

தத்துவ - விளக்கம் 1ம் 10ம் மண்டல விளக்கம்

(9 + 9 = 18 புள்ளிகள்)

விடை எழுதும் திறன் - 2 புள்ளிகள்

(20 புள்ளிகள்)



Scanned with CamScanner

02) (அ) தோற்றமும் வளர்ச்சியும்

வைணவத்தின் தொன்மை - வேதகாலத்தில் விண் சார்ந்த தெய்வம் உபநிடதத்தில் மகாநாராயண உபநிடதம் - புராணங்களில் - நாரதீய, கருட, பாகவத விஷ்ணு புராணங்களில் விஷ்ணுவின் அவதாரங்கள்

இதிகாசங்களில் - இராமாயணம் - இராம அவதாரம்
மகாபாரதம் - கிருஷ்ண அவதாரம்

ஆகமங்களில் பாஞ்சராத்திரம் வைகாசனம் விஷ்ணுவின் பெருமை குப்தர் காலத்தில் மன்னர்கள் தம்மை பரமபாகவதர் என்று அழைத்தமை விஷ்ணுவிற்கு ஆலய தசாவதாரக் கோயில்

சங்ககாலம் - தற்காலம் வரை எழுதப்பட வேண்டும்.

(ஆ) வேதங்கள், பாஞ்சராத்திரம், வைகாசனம், பகவத் கீதை, நாலாயிரத் திவ்விய பிரபந்தம் புராணங்கள் (கருட, பாகவத விஷ்ணு பராணங்கள்) இதிகாசங்கள்

பஞ்ச ஸமஸ்காரம் வழிபாடு

முத்திரை தரிசித்தல், திருமண்காப்பு, நாமசங்கீர்த்தனம் பிரபக்தி

(இ) திருப்பதி ஸ்ரீரங்கம் ஈழத்தில் வல்லிபுர ஆழ்வார் கோவில் பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவில் வண்ணை வெங்கடேஸ்வரப் பெருமாள் கோவில்

வைகுண்ட ஏகதசி, ஆவணி ஞாயிறு (9 + 9 + 2 = 20 புள்ளிகள்)

03) (அ) விஜயாலயன், முதலாம் பராந்தகன், ஆதித்தன், இராஜராஜன், இராஜேந்திரன்

(ஆ) சைவ, வைணவ ஆலயங்களை அமைத்தனர். ஆலயங்களுக்கு வழங்கிய அறக்கொடைகளும் பிராமணர்களுக்கு வழங்கிய தானங்களும் உத்தர மேரூர் சாசனத்தில் கூறப்பட்டுள்ளன. அரச சபையிலும் வீடுகளில் பயன்படுத்தப்பட்ட அளவைக் கருவிகளிலும் ஆடவல்லானாகிய நடராஜ சின்னம் பொறிக்கப்பட்டது. தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் ஆலயங்கள் அமைத்தமை கலை வளர்ச்சிக்கு பங்களிப்பு இலக்கியங்கள் தோன்றுவதற்கு துணையாக அமைந்தமை.

agaram.lk

(இ) இலக்கியங்களும் கலைகளும்:-

பெரியபுராணம், கந்தபுராணம், திருத்தொண்டர் திருவந்தாதி பதினான்கு மெய்கண்ட சாஸ்திரங்கள் கட்டடக்கலை வளர்ச்சி - ஆலயங்கள் சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, நடனக்கலை தொடர்பாக விளக்க வேண்டும். (9 + 9 = 18 புள்ளிகள்)

விடை எழுதும் திறன் - 2 புள்ளிகள்

(20 புள்ளிகள்))

## பகுதி - II

04) (அ) தமிழ் நாட்டுக் கோயிற் கட்டடக்கலை வரலாற்றில் சோழப் பேரரசின் காலம் உன்னத வளர்ச்சிக் காலம்

பல்லவர் அமைத்த அடித்தளத்திலே மகோன்னதமான கட்டடக்கலை மரபொன்றை சோழப் பெருமன்னர் உருவாக்கினர்.

விஜயாலயன், பராந்தகன், முதலாம் ராஜராஜசோழன், இராஜேந்திரன், 3ம் குலோத்துங்கன் காலத்தில் கோயில்கள் எழுச்சி பெற்றன. விஜயாலய சோழேச்சரம் இராஜராஜேஸ்வரம், கங்கை கொண்ட சோழேச்சரம், தாராசுரம், ஐராவதேஸ்வரம், திரிபுவனம், கம்பஹரேஸ்வரர் போன்ற கோயில்கள்



Scanned with CamScanner

(ஆ) சோழப் பெருமன்னரது ஆட்சிக் காலப் பகுதியில் இடம்பெற்ற கோயில் கட்டடக் கலையின் பிரதான வளர்ச்சி நிலைகளை பின்வரும் வகையில் வகைப்படுத்தலாம்.

1. விஜயாலயன் முதல் பராந்தகன் வரையுள்ள காலம் இக்காலத்தில் எழுந்த ஆலயங்கள் பல்லவர் கால ஆலயங்களை ஒத்தவை. விஜயாலய சோழேச்சரம் ஆதித் ஈஸ்வரம், மூவர் கோயில், திருச்சிராப்பள்ளி, ஸ்ரீநிவாஸ நல்லூரில் உள்ள கோரங்கநாதர் கோயில்
2. பராந்தகன் முதல் இராஜராஜன் வரையுள்ள காலம் பற்றி விளக்கப்பட வேண்டும்.
3. இராஜராஜன் காலம் முதல் முதலாம் குலோத்துங்கனுக்கு முற்பட்ட காலம் வரை - விளக்கப்பட வேண்டும்.
4. முதலாம் குலோத்துங்கன் முதல் மூன்றாம் இராஜேந்திரன் வரையான காலம் - விளக்கப்பட வேண்டும்.

விடை எழுதும் திறன் - 2

(9 + 9 + 2 = 20 புள்ளிகள்)

05) (அ) கி.பி. 788 - 820

(ஆ) பிரமம் பற்றிய கருத்துக்கள், ஆன்மா பற்றி கருத்துக்கள், உலகம் பற்றிய கருத்துக்கள், கன்மம், மறுபிறப்பு, முத்தி, அறம் பற்றிய விடயங்கள் எழுதப்பட வேண்டும்.

(இ) அத்வைத - விசிட்டாத்துவைத வேறுபாடு - விளக்கம்
சங்கரரின் பிரமம் பற்றிய கருத்துக்கள் - ராமானுஜரின் பிரமம் பற்றிய கருத்துக்கள் வேறுபாடு
ஆன்மா பற்றிய கருத்துக்கள் வேறுபடும் விதம்
உலகம் கன்மம் மறுபிறப்பு முத்தி வேறுபாடு பற்றிய விளக்கம்

(ஈ) ஞானம் - ஆன்மா அவித்தையினின்று விடுபட்டு தன்னைப் பிரம்மமென உணர்தல்

(2 + 8 + 6 + 4 = 20 புள்ளிகள்)

06) (அ) வேதம், சிவாகமங்கள், புராணங்கள், திருமுறைகள், மெய்கண்ட சாஸ்திரங்கள் இவற்றின் சிறப்பம்சங்கள் கூறப்பட வேண்டும்.

(ஆ) பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள் உண்மை பற்றி சைவசித்தாந்தத்தில் கூறப்பட்டமை பற்றி தெளிவாக விளக்க வேண்டும்.

(இ) சைவ நாற்பாதங்கள், குரு, லிங்க சங்கம வழிபாடு விபூதி, உருத்திராக்கம், திருவைந்தெழுத்து பற்றி விளக்க வேண்டும்.

விடை எழுதும் திறன் - 2

(6 + 6 + 6 + 2 = 20 புள்ளிகள்)

07) இலங்கையில் இந்து சமயத்திற்கும் தமிழ்மொழிக்கும் ஆபத்து வந்து, இந்து மதம் நிலை தளர்ந்திருந்த சந்தர்ப்பத்தில் ஈழத்தமிழ் வானிலே ஒரு இள ஞாயிறு எனத் தோன்றி இன்னலுற்ற சைவத் தமிழ் மக்களின் துயர் துடைத்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சமய சமூகப் பணிகள் பற்றி விளக்க வேண்டும். (20 புள்ளிகள்)

08) (அ) திருக்கோணேஸ்வரம்
மூர்த்தி, தலம், தீர்த்தம் மகோற்சவங்கள் ஆலயம் தொடர்பான நூல்கள் பற்றியும் அதன் சிறப்புகள் பற்றியும் விளக்க வேண்டும்.

(ஆ) அதர்வவேதம்
அதர்வண வேதம் சாதாரண மக்களிடையே நிலவிய நம்பிக்கைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளது. பௌஷ்டிகாணி, ஆயுஸ்ஸானி, ஸ்திரிகரமாணி, ராஜகர்மாணி போன்ற பகுதிகள் செல்வச் செழிப்பையும், நிறைந்த ஆயுளையும் பெண்ணின் சுபீட்சம் பற்றியும் அரசனின் நன்மை பற்றியதாகவும் அமைந்துள்ளவை மாந்திரீகத்திற்கும் பில்லி, சூனியம் வசியத்திற்கு முக்கியத்துவம்

agaram.lk



Scanned with CamScanner

(இ) நடராஜ மூர்த்தம்

சிவமூர்த்தங்கள் 64 ஆகும். இதில் சிறப்பாக 25 மூர்த்தங்கள் குறிப்பிடப்படுகின்றன. இதில் நடராஜ மூர்த்தமும் ஒன்று. நடராசர் வடித்தின் தோற்றம் சிற்ப சாத்திரங்கள் கூறும் அளவும் பிரமாணங்களின் படி அமைக்கப்படுகின்றது. அங்க இலட்சணங்களும் அவை உணர்த்தும் உண்மைகள் - பஞ்ச கிருத்திய விளக்கம் என்பன கூறப்பட வேண்டும்.

(ஈ) இராமகிருஷ்ணமிஷன்

சுவாமி விவேகானந்தரால் 1897 ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. சமயப் பணி, சமூகப் பணி ஆகியவற்றை உலகளாவிய நிலையில் மேற்கொள்ளும் நிறுவனமாக திகழ்ந்து வருவது இலங்கையிலும் அதன் பணி தொடர்ந்து வருகின்றது. இந்து சமய தத்துவ சிந்தனைகளை பிரசங்கள் மூலம் பரப்பும் பணி தொடர்ந்து வருகின்றது. சமய சமூகப் பணிகள் பற்றி விரிவாக எழுத வேண்டும்.

(உ) தர்மசாஸ்திரங்கள்

தனி மனிதனுக்கும் சமூகத்திற்கும் வாழ்க்கை நெறிகளையும் வழிகாட்டும் விதி முறைகளையும் கூறும் நூலாக தர்ம சாஸ்திரங்கள் சிறப்பிக்கப்படுகின்றன. ஸ்மிருதி இலக்கியங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. நினைத்துச் செய்யப்பட்ட ஸ்மிருதிகள் எழுதியவர்களின் பெயர்களால் அழைக்கப்படுகின்றது. இந்துக்களின் வாழ்வியலைப் பாதுகாப்பது. ஒவ்வொருவருக்கும் உள்ள கடமைகள் சொல்லப்படுகின்றது.

(ஊ) குப்தர்கால இலக்கியங்கள்

காளிதாசன் முதலான நவ கவிகள் தோன்றி செழுமைமிக்க இலக்கியங்கள் படைத்த காலம் சமஸ்கிருத இலக்கிய வரலாற்றின் பொற்காலம். குமார சம்பவம், ரகு வம்சம், சாகுந்தலம் மறுநூல் நாட்டிய சாஸ்திரம் மகாபாரதம் போன்றன இக்காலத்தில் பிரபல்யமாகின வடமொழிப் புராணக் கதைகள் இதிகாசங்கள் தழுவிய இலக்கியங்கள் எழுச்சி பெற்றன.

(5 × 4 = 20 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner